தமிழகம்

...ப்பு ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மலர் 4] குன்றக்குடி 28—1—63 வார இதழ் விலை – 10 காசுகள். [இதழ் 10

எழுக பாரதம்!

இமயம் அனையவர் நேருஜி — நம்
இதயம் கொண்டவர் நேருஜி
நமதருந் தலைவர் நேருஜி — இந்
நாட்டின் தலைவர் நேருஜி.

நடுநிலைக் கொள்கை தந்தவராம் – நம்
நாட்டைக் காத்திட வந்தவராம்
குடிமைப் பண்பின் பெருந்தலைவர் -- இக்
குவலயம் போற்றும் அருந்தலைவர்.

பாரத நாட்டின் வடக்கினிலே - கொல்
பாதகச் சீனப் பேயாட்டம்
நேருவின் பின்நாம் நின்றிடுவோம் - அந்
நீசப் பகையினை வென்றிடுவோம்.

புலிப்பகை கொண்ட எலிக்கூட்டம் – இப்
புவியினில் வாழ்தல் முயற்கொம்பே!
புலிநிகர் பாரதம் எழுந்திடுக – அப்
புல்லியர் பகைமை ஒழித்திடவே!

—சாமி பழனியப்பன்

வாழ்விக்க வந்தோர் வரலாறு

8. அப்பூதியடிகள்

...அடிகளார்...

(முன் தொடர்ச்சி)

அப்பூதியடிகளின் வேண்டுகோளை அன்புடன் ஏற்று இருக்கையிலமர்ந்து வெண்ணீறணிந்தார். அப்பூதியடிகட்கும் அவர்தம் மனைவியார்க்கும் திருநீறு வழங்கினர். அவர்களின் இளையபுதல்வர்க்குத்திருநீறு வழங்கும்பொழுது அப்பூதியடிகளை நோக்கி, 'உங்கள் மூத்த புதல்வனையும் கூப்பிடுங்கள்' என்றார். அப்பரடிகள் அமுதருந்த இடையூறு ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதற்காக நிகழ்ந்தது எதையும் கூறாமல், 'இப்போது இங்கு அவன் உதவான்' என்றார் அப்பூதியடிகள். இவ்வுரையைக் கேட்டதும் அப்பரடிகளின் திருவுள்ளத்தில் திருவருளுணர்வின் பயனாக ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது.

உடனே அப்பரடிகள், 'ஐய இவ்வுரை பொறாது என் உள்ளம்; என்ன நடந்தது? அவன் என்ன செய்தான்? உண்மையைச் சொல்லுங்கள்' என்று பரபரப்புடன் கேட்டார்.

பெரியவர் அமுதருந்தும் பெரும் பேற்றுக்கு இடையூறு ஏற்படுமே என்பதற்காக அவர் நிகழ்ந்ததைக் கூறாதிருந்தார். எனினும், பெரியவர் கேட்டுவிட்டாரே, அவரிடத்து உண்மையை மறைப்பது சிறப்பல்லவே என்று கருதிச் சிந்தைமிக நொந்து. அன்போடு அப்பரடிகளை வணங்கித் தன் மூத்த பிள்ளைக்கு உற்றதை முறையே கூறினர். இதைக் கேட்டதும்,



'நன்று நீர் புரிந்த வண்ணம்; யாவர் இத் தன்மை செய்தார்?' என்று கூறி விரைந்தெழுந்து மூத்த திருநாவுக்கரசின் 'ஆவிதீர் சவத்தைப்'' போய்ப் பார்த்து, திருவருள் புரியுமாறு 'பாவிசைப் பதிகம்' பாடினர். விடம் நீங்கியதும் உறங்கி விழிப்பது போல மூத்த திருநாவுக்கரசு மூர்ச்சை பெற்றெழுந்தார். தமது குலகுருவான அப்பரடிகளின் மலரடிகள் திருநாவுக்கரசுக்கு திருநீறு அளித்தார்.

அப்பூதியடிகளும் அவர்தம் அருமை மனைவியாரும் மாண்ட தம் மகன் மீண்டெழுந்த மகிழ்ச்சியில் திளைக்கவில்லை. மாறாக, 'அன்பர் அமுது செய்து அருளுதற்குச் சிறிது இடையூறு செய்தான் இவன்' என்று சிந்தை நொந்தார்களாம். தூய தொண்டின் நெறி போற்றிய குடும்பமல்லலவா?

அப்பரடிகள் அப்பூதியடிகளின் அகக்குறிப்பை யுணர்ந்தார். அப்பூதியடிகளும் அவர்தம் மனைவியாரும் வீட்டைக் கூட்டி மெழுகிக் கோலம் புதுக்கிச் சுடர் விளக்கேற்றி நீண்ட வாழைக் குருத்தை விரித்து அமுது படைத்தனர். அப்பரடிகள் அப்பூதியடிகளையும் அவர்தம் அருட் புதல்வர்களையும் நோக்கி, 'அரும் புதல்வர்களும் நீரும் அமுது செய்க' என்று கூறினர். திருநாவுக்கரசர் விரும்பிய வண்ணமே, எல்லோரும் மருங்கமர்ந்து அமுதருந்தினர். இதன் பின் 'மேதகு நாவின் மன்னர்' ஆன அப்பரடிகள், தூய தொண்டின் நெறிநின்ற அப்பூதியடிகளிடத்துக் 'காதல் நண்பளித்துத்' திங்களூரில் பலநாள் தங்கிப் பின்னர் திருப்பழனம் போந்து 'நற்றமிழ்ப் பதிகம்' பாடினர். அப்பூதியடிகளார்தம் அடிமைப் பண்பை - மீக்கூர்ந்த பக்தியைச் சிறப்பித்துப் பேசினர். அப்பூதியடிகளும் திருநாவுக்கரசரின் திருவடிகளை நாளும் சிந்தித்து, எப்பொருளும் அப்பரடிகள் தம் பொற்றாளே எனக் கருதிச் சில காலம் வாழ்ந்து, தில்லையம்பதியில் திருநடம் புரியும் 'நவ்வியங் கண்ணாள் பங்களின்' செவ்விய பாதமலர்களைச் சேர்ந்தார்.

தொண்டின்நெறி நின்றவர்களைத் துயரம் ஒன்றும் செய்யமுடியாது; அத்தகையோர் துன்பத்தையும் வென்று நீடுவாழ்வர் என்பதற்கு அப்பூதியடிகளின் வரலாறு தக்க சான்றாகும்.

(முற்றும்)

தமிழகம்

அன்பாலே மக்கள்குலம் இணைந்து வாழும்
அருள்நெறியைப் பரப்புதலே எங்கள் நோக்கம்

மலர் 4] 28-1-63 [இதழ் 10

பிரிவினைத் தடைச்சட்டம்

சுதந்திரத்திற்கு முன் இருந்ததை விடச் சுதந்திரத்திற்குப் பிறகு பாரத நாட்டின் ஒருமைப்பாட்டுணர்ச்சி நன்ருகவே வளர்ந்திருக்கிறது. பிரிவினை இயக்கங்கள் தோன்றி வளர்ந்திருக்கின்றன என்பது உண்மையே ஆனுலும், அவைகள் நாட்டைப் பிரித்து விடுகிற அளவிற்கு வலிமையுடையனவாக இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. தேசிய இயக்கங்களின்—கட்சிகளின் செயல் தன்மை சீராக இல்லாததும் நம்முடைய இலட்சியமான இனவர்க்க பேதமற்ற சோஷலிச சமுதாய அமைப்பினுல் நசித்துப் போகக் கூடிய பிற்போக்குச் சக்திகள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளச் செய்யும் கடைசி முயற்சியுமே பிரிவினை இயக்கங்களை வலிமையுடையன போலத் தோற்றமளிக்கச் செய்துள்ளன.

மொழிவழி தேசிய இனம் பத்தியக் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து செல்ல வேண்டுமானுல் பாராளுமன்ற அங்கத்தினர்களின் மூன்றில் இரு பங்கினரின் வாக்குகளைப் பெற்ருக வேண்டும். அங்ஙனம் பெறக் கூடிய ஆற்றல் இன்றைய நிலையில் எந்தப் பிரிவினை இயக்கத்திற்கும் இல்லை—இனியும் இருக்கமுடியாது என்பதே நமது நம்பிக்கை. பாராளுமன்றத்தில் மூன்றில் ஒரு பங்கினர் கூட எதிர்க்கட்சியினராக வரமுடியாத அளவிற்குத் தேசிய காங்கிரஸின் ஆற்றல் உயர்ந்திருக்கிறது. அப்படியிருக்கப் பிரிவினைக் கட்சியினரைப் பற்றி இவ்வளவு அக்கறை காட்டுவது அவசியந்தானு என்பதை நமது அரசாங்கம் சிந்திக்கலாம்.

டில்லி மேல் (சட்ட) சபையில் பிரிவினைத் தடைச் சட்டம் அடிப்படை உரிமையை வெட்டி வீழ்த்துகிறது; இது மக்களாட்சிக் கொள்கைக்கு விரோதமானது என்றெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணுதுரை பேசியிருக்கிருர். அதுமட்டுமல்ல, 'நாங்கள் தவறு செய்தால் திருத்தலாம்; உங்கள் பக்கம் எங்களை இழுக்கலாம்; பிரிவினையால் இந்தியப் பாதுகாப்புக் கெடாது" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

இன்று நாடு பெரிதும் விழிப்படைந்திருக்கிறது. 'தேசிய ஒருமைப் பாடு' மேலோங்கி வளர்ந்து உறுதிப் பட்டும் வருகிறது. இந்நிலையில் பிரிவினைக் கருத்துக்களுக்கு மக்கள் நிச்சயமாக ஆதரவு தரமாட்டார்கள். எனவே, இப்போது பிரிவினைத் தடைச் சட்டத்தை நிறைவேற்றுவதைவிடப் பிரிவினையால் விளையும் பெருந் தொல்லைகளையும், கேடுகளையும், தேசிய ஒருமைப்பாட்டின் இன்றியமையாமையையும் நமது நாட்டு மக்களிடம் இன்னும் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்து விளக்கிப் பிரச்சாரம் செய்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தால், தடைச் சட்டம் இல்லாமல் பிரிவினை இயக்கம் தானே அழிந்து ஒழிந்து விடும். மக்களாட்சி நடைபெறும் நாட்டில் மக்களின் ஆதரவில்லாத ஓரியக்கம் எப்படி வளர்ந்து வாழ முடியும்?

மேலும் இன்றைய ஆட்சி முறையில் மொழிவழித் தேசீய இனத்தின் நலன்கள் அனைத்தும் பாதுகாக்கப் பெற்றுள்ளனவா என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும். தேசீய இனங்களின் பாதுகாப்பிற்காக இன்னும் செய்யப்பெற வேண்டிய சீரமைப்புக்கள் பல உள்ளன. அவற்றைச் சீர்தூக்கச் செய்ய வேண்டியனவற்றைச் செய்து தேசீய நலன்களுக்குப் பூரணப் பாதுகாப்பிற்குரிய உத்தரவாதம் கிடைத்த பிறகு அரசியல் சட்டத்தில் உள்ள "பிரிவினை கேட்கும் உரிமை"யை எடுப்பதே நியாயமாக இருக்க முடியும்.

பூரண ஜனநாயக ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டிருக்கிற நாம் ஜனநாயக முறையிலேயே இந்த நாட்டின் பல்வேறு மொழி வழிப்பட்ட தேசீய இனங்களின் ஊடே ஒன்றிய ஒருமைப் பாட்டை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அவ்வழித் தோன்றும் ஒருமைப்பாடுதான் நிலையானதாகவும் உறுதியானதாகவும் இருக்க முடியும்.

—துணை ஆசிரியர்

★

மன்னார்குடியில் அருள் நெறித் திருக்கூட்டம்

மன்னார்குடியில் 9...1...63ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் அருள் நெறி மன்றம் ஆரம்பிக்கப் பெற்றது. புலவர் இராமச் சந்திரன் அனைவரையும் வரவேற்றார். தவத்திரு அடிகளார் அவர்கள் பேசுகையில் மனிதனுடைய உலகியல் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் பணியில் நமது மன்றம் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். பின்னர் திரு. ஞானசிகாமணிப் பிள்ளை பேசினார்.

தலைவர் திரு எம். கே. என். கணேசபிள்ளை; துணைத்தலைவர் திரு பி. ஆர்.என். சந்தான ராசகோபாலன்; செயலர், புலவர் திரு இராமச் சந்திரன்; பொருளாளர் திரு. க. சுப்பிரமணிய முதலியார், திரு சந்தானம் உடையார், திரு. கோ ஜெயராம பிள்ளை.

வாழ்த்துகிறோம்

குன்றக்குடி அடிகளார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. ப. சண்முகவேலாயுதத்திற்கும், பூவாளூர் பெருநிலக்கிழார் திரு. மு. சுப்பிரமணியன் செட்டியார் மகள் செல்வி மீனாட்சிக்கும் திருவையாறு ஐயாறப்பர் ஆலயத்தில் 28 - 1 - 63ல் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. தவத்திரு அடிகளார் அவர்கள் ஆசியுரை வழங்கியருளினார்கள்.

மணமக்கட்கு நமது
மனமார்ந்த வாழ்த்துக்கள்

- ஆசிரியர்.

உடலும் உள்ளமும்

ஆரோக்கியமான உடம்பில் ஒரு புண் ஏற்பட்டால் அது விரைவிலேயே மேவி ஆறி விடும். ஆரோக்கியமில்லாத உடம்பில் ஏற்படும் புண் அப்படி ஆறுவதில்லை. அதுபோல ஆரோக்கியமான மனம் உள்ளவர்களிடத்தில் சில சந்தர்ப்பங்களில் கோபதாபங்கள் ஏற்பட்டாலும் அது மிக விரைவில் மாறி மீண்டும்பழையபந்த பாசம் உண்டாகும். ஆரோக்கியமில்லாத மனமுடையவர்களிடத்தில் ஏற்படுகிற கோபதாபங்கள் அப்படி மாறுவதில்லை.

—அடிகளார்

குன்றக்குடியில்

குடியரசு தினவிழா

குன்றக்குடி கிராமப் பஞ்சாயத்து தேசியப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் 26 - 1 -63ல் குன்றக்குடி அருள்நெறிச் சிறுவர் பூங்காவில் 'குடியரசு தினம் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

காலை 8 மணி அளவில் குன்றக்குடி அருள்நெறிக் கல்வியகங்களின் மாணவ மாணவியரும், ஆசிரிய ஆசிரியைகளும், பொதுமக்களும், போலீசாரும் பல்வேறு கூட்டுறவு நிறுவத்தினருமாக பல ஆயிரக்கணக்கானவர்கள் சாரை சாரையாக அணிவகுத்துத் தவத்திரு அடிகளார் தலைமையில் நடந்து ஊர்வலம் வந்த காட்சி மகிழ்ச்சியும், உணர்ச்சியும் ஊட்டுவதாக இருந்தது. ஊர்வலம் சிறுவர் பூங்காவைச் சென்றடைந்ததும், தவத்திரு அடிகளார் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, குடியரசு தின உறுதிமொழியைப் படித்தார்கள். அதனை எல்லோரும் வழிமொழிந்து உறுதி எடுத்துக் கொண்டனர். பின் தவத்திரு அடிகளார் அவர்கள், கிராம மக்கள் தங்கள் காழ்ப்புகளையும் கசப்புகளையும் நீக்கி, ஒற்றுமையுடன் உழைத்து முன்னேற வேண்டும் என்றும், நாட்டின் வளத்திலும் பாதுகாப்பிலும் தமது கடமையைச் செய்ய முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப் பெற்றுள்ள பல்வேறு குழுக்களின் கடமையையும், பொறுப்பையும் தெளிவாக்கினார்கள். நாட்டு வாழ்த்தோடு காலை நிகழ்ச்சி நிறைவெய்தியது.

மாலை நிகழ்ச்சி பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுடன் ஆரம்பமாயிற்று. போலீசார், பொதுமக்கள், மாணவ மாணவியர், ஆசிரியர்கள், ஆதீன தேவஸ்தான ஊழியர்கள் இப்படிப் பல்வேறு பிரிவினரும் போட்டிகளில் கலந்து கொண்டனர். விழாவை யொட்டி ஏற்கனவே, வாலிபால், கால்பந்து முதலிய பல்வேறு போட்டிகளும் நடத்தப் பெற்றன.

பின், தவத்திரு அடிகளார் அவர்கள், கிராம மக்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டத்தக்க வகையில் இவ்வாண்டு குடியரசு தினத்தைக் கொண்டாட வேண்டும் என்று நமது அரசாங்கம் விரும்பியதற்கேற்ப நம்மால் இயன்ற அளவிற்கு இவ்விழாவை ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். மேலும் அவர்கள் பேசுகையில், நேருஜி இந்த நாட்டின் ஒப்புயர்வற்ற தலைவர். இங்கே யாருடைய வீட்டுக்குள் போனாலும் 'எங்கள் தலைவர் நேரு - இது அவருடைய வீடு - அவருடைய எதிர்ப்பாளர்கள் யாருக்கும் இங்கு இடமில்லை என்று உணர்த்துவது போல எல்லா வீடுகளுக்கும் இப்பொழுது நேருஜி படம் அச்சிட்ட காலண்டர் கொடுக்க முடிவு செய்திருக்கிறோம் என்றார்கள்.

மேலும், ஒரு அரசாங்கம் என்றால் பல்வேறு அமைப்புகள் உண்டு. நாம் இங்கே இப்பொழுது பல்வேறு அமைப்புக்களை - குழுக்களை இந்தக் குடியரசு நாளில் ஆரம்பிக்கிறோம். எல்லாக் குழுக்களும் இரண்டொரு நாளில் கூடிக் கலந்து ஒரு திட்டம் வகுத்து, அடுத்த குடியரசு நாளுக்குள் அந்தத் திட்டங்களை நிறைவேற்றப் பாடுபட வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம் என்றார்கள்.

விழாவிற்கு கல்லல் ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தலைவர் திரு. நா. மாணிக்கம் செட்டியார் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில், நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடிக் காலத்தில் நாம் மேற்கொண்டுள்ள நடுநிலைக் கொள்கையை எல்லா நாடுகளும் ஆதரிக்கின்றன என்றார். மேலும் அவர் பேசுகையில், தவத்திரு அடிகளார் அவர்கள் நமக்குத் தலைமை தாங்கி, நம்மையெல்லாம் தக்க முறையில் வழிநடத்திச் செல்லுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

திரு. அழ. சுப்பையா அம்பலம் பேசுகையில், இந்த நாட்டில் ஒரே ஒரு கட்சியைத் தவிர எல்லாக் கட்சிகளும் நமது பிரதமர் நேருஜியின் நடுநிலைக் கொள்கையைப் பாராட்டுகின்றன. அத்தகைய நேருஜியின் படம் எல்லா வீடுகளிலும் இடம் பெறவேண்டும் என்பதற்காக தவத்திரு அடிகளார் அவர்கள் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள் என்று கூறி நேருஜியின் படம் அச்சிட்ட காலண்டர்களை வழங்கினார்.

அடுத்து, குன்றக்குடி பஞ்சாயத்து தேசப் பாதுகாப்புப் படையை திரு. டி. சினிவாசன் தொடங்கி வைத்தார். பல்வேறு துணைக்குழுக்கள்

அமைத்துள்ள முயற்சியை அவர் பாராட்டி ஏனைய பஞ்சாயத்துக்களுக்கு இது ஒரு எடுத்துக் காட்டாக அமையும் என்றார். மேலும் அவர் பேசுகையில், கல்லல் பஞ்சாயத்து ஒன்றியத்திலேயே குன்றக்குடிதான் எல்லாவகையிலும் சிறந்த முன்மாதிரியாக விளங்குகிறது. இதற்கு தவத்திரு அடிகளார் அவர்களின் ஒத்துழைப்பும், பெருமுயற்சியுமே காரணமாகும் என்றார்.

அடுத்து திரு. தினகரன் பேசுகையில். "தவத்திரு அடிகளார் அவர்களின் பெருமுயற்சியால் குன்றக்குடி கிராமம் கூட்டுறவுத் துறையில் மிக முன்னணியில் நிற்கிறது. பெரும்பாலும் இங்கு எல்லா கூட்டுறவு அமைப்புக்களும் இருக்கின்றன என்று கூறலாம். இது பெரிதும் பாராட்டத்தக்கது. பிற இடங்களில் கூட்டுறவு அமைப்பில் 40 சதவிகிதத்தினர் கூடப் பங்கு பெறவில்லை. அந்த அமைப்புகளை இயக்குகிறவர்கள், அங்கத்தினராகச் சேர விரும்புகிறவர்கள் எல்லோரையுமே அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்வதில்லை. இதனால் சண்டைகளும் சச்சரவுகளும் ஏற்படுகின்றன. இங்கோ கூட்டுறவு அமைப்பில் 80 சதவிகிதத்தினர் பங்கு பெற்றுள்ளனர் - இங்கு இன்னும் 200 பேர் மட்டுமே கூட்டுறவு இயக்கத்தில் சேர்க்கப் பெற வேண்டியவர்கள் என்கிற செய்தி பெருமகிழ்ச்சிக் குரியதாகும்.

"நிலமில்லாது போனாலும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் கடன் கொடுக்கலாம் என்று ஒரு சட்டம் வந்திருக்கிறது. எனவே நிலமில்லாத விவசாயிகளும் கூட்டுறவில் அங்கத்தினராகலாம். இதுவரை கிராமச் சங்கங்களில் தனிநபர்களுக்கு 250 ரூபாய்தான் கடன் கொடுக்கப் பெற்று வந்தது. இப்போது அது 3 ஆயிரமாக உயர்த்தப் பட்டுள்ளது" என்று குறிப்பிட்டு, கூட்டுறவு யூனியனுக்குப் புதிய அங்கத்தினர்களைச் சேர்த்தார்.

திரு. பி. சுப்பையா அம்பலம் உழைப்புச் சக்தி வங்கியை ஆரம்பித்து வைத்து, மிகக் குறுகிய காலத்தில் குன்றக்குடியில் உழைப்புச் சக்தி வங்கி ஆரம்பித்திருப்பது பாராட்டுக்குரியது; தவத்திரு அடிகளார் அவர்களின் பெருமுயற்சிதான் இதற்குக் காரணம்; அடிகளார் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம் என்றார். பின்னர், மாதத்திற்கு ஒருநாள் உழைப்பை வழங்குவதாக 20 பேர் உறுதியளித்திருக்கும் செய்தி அறிவிக்கப் பெற்றது.

வீடுகளுக்கு படிப்பதற்காக நூல் வழங்கும் இயக்கத்தை திரு. இராம. நாட்டராயன் ஆரம்பித்துவைத்தார். அவர் பேசுகையில், "இது ஒரு புதுமையான இயக்கம் - புரட்சிகரமான இயக்கம்—தாய்மார்கள் இந்த இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; இங்கே சுவாமி (தவத்திரு அடிகளார்) அவர்களின் அனுக்கிரகத்தால் இந்த இயக்கம் ஆரம்பமாகியுள்ளது. இது நமது மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் பரவவேண்டும்" என்றார்.

திரு. டி. பி. கருணாகரன் நாயர் பேசுகையில், "எந்த விழாவிலும் குன்றக்குடிதான் முதன்மை வகிக்கிறது - சிறப்பாகவும் செய்கிறது. இதற்குக் காரணமாக விளங்கும் தவத்திரு அடிகளார் அவர்களுக்கு எனது வணக்கமும் நன்றியும்" என்று கூறி, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்

இறுதியாக, தவத்திரு அடிகளார் அவர்கள் தமது வாழ்த்துரையில், கிராமக் குழுக்கள் அனைத்தும் ஒன்றுபட்டு உழைத்து நமது அரசாங்கத்தின் திட்டங்களையும் இலட்சியங்களையும் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மேலும் பேசுகையில்,

திட்டங்களையும், இலட்சியங்களையும் நிறைவேற்ற நமது மக்கள் நலப்பாதுகாப்பு அரசாங்கம் பலவகையிலும் உதவிகள் புரிகிறது; முயற்சி, ஒற்றுமை, உழைப்பு ஆகியவற்றால் நாம் நமது கடமையை நிறைவேற்ற வேண்டும் - நிறைவேற்றுவோம் என்று உறுதி கூறினார்கள்.

விழாவையொட்டி நடைபெற்ற வாலிபால் விளையாட்டில் தவத்திரு அடிகளார் அவர்களின் குழு வெற்றி பெற்றது, விழா நாளில் நடைபெற்ற கயிறு இழுப்புப் போட்டியில், தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் ஒரு குழுவும், தேவகோட்டை கோட்டாட்சித் தலைவர் திரு. டி. பி. கருணாகரன் நாயர் தலைமையில் அரசாங்க அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவும் கலந்து கொண்டனர். தவத்திரு அடிகளார் அவர்களின் குழு வெற்றிபெற்றது. இந்தப் போட்டிகளில் பரிசாக வழங்கப்பெற்ற கதர்வேட்டி, கதர்த் துண்டுகள் ஆகியவை ஏலத்தில் விடப்பெற்று, அதன் மூலம் கிடைத்த ரூ.163ஐ தவத்திரு அடிகளார் அவர்கள் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கினார்கள்.

பின்னர், அடிகளார் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியரின் மாற்றுடைப் போட்டியும், பயிற்சிப்பள்ளி மாணவியரின் நாடகமும் நடைபெற்றன.

செய்திச் சுருள்

லயோலா கல்லூரித் தமிழ் மன்றம்

சென்னை லயோலா கல்லூரி விடுதித் தமிழ் மன்றத்தின் பொங்கல் விழா 20—1—63ல் தமிழக சட்டசபைத் தலைவர் திரு. எஸ். செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். கவிஞர் கண்ணதாசன், டாக்டர் மு. வரதராசனார் ஆகியோரும் கலந்துகொண்டனர். தொடக்கத்தில் மன்றச் செயலர் திரு. மா. சேசையா அனைவரையும் வரவேற்றார்.

நன்னெறிக்கழக ஆண்டுவிழா

உடுமலைக்கு அருகிலுள்ள நல்லண கவுண்டன் புதூரில் 21—1—63ல் நன்னெறிக் கழகத்தின் 8-வது ஆண்டு விழா பேரூர் சாந்தலிங்க அடிகள் தமிழ்க்கல்லூரித் தலைவரும் கோவை மாவட்ட அருள் நெறித் திருக்கூட்டத் தலைவருமான தவத்திரு இராமசாமி அடிகள் தலைமையில் நடைபெற்றது. உடுமலை திருமதி எஸ். நாமகிரி அம்மாள் வடலூர் திரு. வேலுச்சாமி அடிகள் ஆகியோர் பேசினர். திரு. கு. வெ. ராமசாமி நன்றி கூறினார்.

திருச்சியில் சீன ஆக்ரமிப்புக் கண்டனக் கூட்டம்

திருச்சி தேவர் மன்றத்தில் திருச்சி அருள் நெறித் திருக்கூட்டத்தின் சார்பில் 21-1-63 பிற்பகல் 6மணி அளவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். எஸ். சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் தலைமையில் சீன ஆக்ரமிப்புக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. வழக்கறிஞர் திரு. எம். முத்துக்குமாரசாமி திருச்சி நகரமன்றத் தலைவர் திரு. ஏ. எஸ். ஜி. லூர்துசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். சீனாவின் ஆக்ரமிப்புக் குறித்தும், நமது கடமை குறித்தும் தவத்திரு அடிகளார் அவர்கள் விரிவாகப் பேசினார்கள். (சொற்பொழிவின் சுருக்கம் பிறிதோர் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது) திரு. சொ. கிருஷ்ணன் நன்றி கூறினார். இரவு, குன்றக்குடி அருள் நெறிக் கலைக் குழுவினரின் 'சந்திப்பு' என்ற நாடகம் சிறப்பாக நடைபெற்றது.

கோவை பொறியியற் கல்லூரி முத்தமிழ் மன்றம்

பூளைமேடு கோவை பொறியியற் கல்லூரி முத்தமிழ் மன்ற ஆண்டுவிழா 22-1-63ல் திருமதி காமாட்சி குமாரசாமி எம். ஏ., தலைமையில் நடைபெற்றது. தவத்திரு அடிகளார் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். மன்றச் செயலர் நன்றி கூறினார்.

பழநிபட்டி இளைஞர் மன்றம்

பழநிபட்டி இளைஞர் மன்றச் சிறப்புக் கூட்டம் 23-1-63ல் குடைகிபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. வா. க. சின்ன வீரன் தலைமையில் நடைபெற்றது. திரு. வேங்கடசாமி நாயுடு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பழநிபட்டி பொது மக்கள் சார்பில், தவத்திரு அடிகளார் அவர்களின் எடைக்கு எடை 160 பவுண்டு சுண்டைக்காயை வட்ட மதுரைத் தொகுதி சட்டசபை உறுப்பினர் திரு. எம். மருதநாயகம் வழங்கினார். நத்தம் வட்டார ஊராட்சி மன்ற ஆணையர் திரு. ஆர். சுப்பராமன் பி. ஏ.. சீன ஆக்ரமிப்பை விளக்கிப் பேசினார்.

தவத்திரு அடிகளார் அவர்கள் 'கிராமப் பொது நலம்' என்ற தலைப்பில் அரியதொரு சிறப்புரை ஆற்றினார்கள்.

பழநிபட்டி பொது மக்கள் சார்பில் தேன் 36 அவுன்ஸ்; எலுமிச்சம் பழம் 36; திருக்குறள் 1 ஆகியன தவத்திரு அடிகளார் அவர்களுக்கு வழங்கப் பெற்றன. மற்றும் பலர் பல்வேறு பொருள்கள் வழங்கினர்.

பெட்ரும் லைட், பவுண்டன் பேனா, திருக்குறள் முதலியன ஏலத்தில் விடப் பெற்றதில் கிடைத்த தொகை ரூ 50ம் தேசியப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுக்கப் பெற்றது.

தபால் தந்தி ஊழியர்

தமிழ் மன்றம்

திருச்சிராப்பள்ளி தபால் தந்தி அலுவலக ஊழியர்கள் தமிழ் மன்றத்தின் சார்பில் 25-1-63ல் திரு. கைலை அனந்தர் தலைமையில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. திரு. குத்புதீன் அனைவரையும் வரவேற்றார்.

தலைவர் தமது தலைமையுரையில் தமிழனின் சிறந்த இலட்சியம் மனிதனை வாழ்வது மட்டுமல்ல—தெய்வீகத் தன்மையுடையவனாகவும் அமரத்துவமுடையவனாகவும் வாழ்வதும் ஆகும் என்றார். மேலும் பேசுகையில், தவத்தில் வீரராக இருக்கும் தவத்திரு அடிகளார் அவர்கள் தவவலிமையால் நாட்டு மக்கள் உள்ளத்தில் வீரவலியூட்டுவார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். பின்னர் தவத்திரு அடிகளார் அவர்கள் ஆற்றிய சிறப்புரையில் 'அன்று தமிழகம் வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்தது. எல்லோருமேபோர்முனைக்குச் சென்றார்கள். பின்னர் சமண பௌத்த மாயாவாதங்கள் பரவ ஆரம்பித்தும் தமிழர்களின் வீர வரலாற்றில் ஒரு தொய்வு ஏற்பட்டது. அந்தத் தொய்வைப் போக்கத்தானோ என்னவோ இன்று சீனா இந்தியாவின் மீது படையெடுத்திருக்கிறது. இன்று வீரம் அதிகம் தேவைப்படுகிறது. வீரமும் போரும் நமக்குப் பரம்பரைச் சொத்து. அந்த வீர வரலாற்றைப் புதிப்பிக்கின்ற ஒரு பொன்னுளாக இந்த நன்னாள் அமையவேண்டும்' என்றார்கள். செயலர் திரு. வேதமூர்த்தி நன்றி கூறினார்.

ஜீவா கேட்ட நிலம்

அவர் நினைவாக எழுப்பும் நிறுவனத்திற்கு வழங்கப் பெறும்

அரசியல் தலைவர்களும் இலக்கிய வாதிகளும் தமது ஓய்வுக் காலத்தில் தங்கி ஆராய்ச்சி முதலியன செய்யவும், நாட்டிற்குத் தம்மாலியன்ற சேவையை தொடர்ந்து செய்து வரவும், நிரந்தரமான ஒரு நிறுவனம் வேண்டும் என்று தோழர் ஜீவானந்தம் அவர்கள் தாம் இறப்பதற்குச் சில வாரங்கள் முன்பு தவத்திரு அடிகளார் அவர்களிடம் தெரிவித்து, சென்னைக்கு அருகில் ஆதம்பாக்கத்தில் 5 ஏகர் நிலம் தருமாறு கேட்டார். தவத்திரு அடிகளார் அவர்கள் தோழர் ஜீவாவின் வேண்டுகோளையும் விருப்பத்தையும் மகிழ்வோடு ஏற்று, நிலம் தர இசைந்தார்கள். நிலத்திற்குப் பத்திரம் பதிந்து கொடுக்கச் சிலநாட்களில் சென்னை புறப்படவும் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால், எதிர்பாராத விதமாக திடீரென்று ஜீவா இறந்துவிட்ட செய்தி கிடைத்ததும் தவத்திரு அடிகளார் அவர்கள் பெரிதும் வருந்திக் கண்ணீர் சிந்தினார்கள்.

மேலும், ஜீவா அவர்கள் விரும்பியபடி மேற்படி நிறுவனத்தை நிறுவ முயற்சிக்க வேண்டும் என்றும், அவர் நினைவாகவே அதனைச் செய்ய வேண்டுமென்றும் விருப்பம் தெரிவித்து, அதற்காக ஐந்து ஏக்கர் நிலத்தை எழுதி வைக்கப் போவதாகவும் கூறினார்கள். இது மிக விரைவில் நடைபெறலாம் என்றும் தெரிகிறது.

ஜீவா நினைவுச் சுழற்கோப்பை

தவத்திரு அடிகளார் வழங்கினார்கள்.

காரைக்குடி அழகப்பா தமிழ்மன்றத்தின் முப்பெரும் விழா நிறைவு நாள் 28-1-63ல் பேராசிரியர் சி. இலக்குவனார் தலைமையில் நடைபெற்றது. கவியரசர் பாரதிதாசன் சிறப்புரையாற்றினார். கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற திரு. இரா. மாதவன் பயிலும் மதுரை செந்தமிழ்க் கல்லூரிக்கு, சமுதாயத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டு செய்து அண்மையில் மறைந்த தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் நினைவாக தவத்திரு அடிகளார் வழங்கிய சுழற்கோப்பை பரிசளிக்கப் பெற்றது. கவிதைப் போட்டிக்கு கவிஞர் கண்ணதாசன் வழங்கிய சுழற்கோப்பை சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கும் சொற்பொழிவுப் போட்டிக்கு கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் வழங்கிய சுழற்கோப்பை காரைக்குடி பொறியியற் கல்லூரிக்கும் வழங்கப் பெற்றன. இறுதியில் திரு. ப. வளன் அரசு நன்றி கூறினார்.

இழந்தது ஏதுமில்லை

சுதந்திரக்கட்சியினர் தனியார் உரிமை பறிபோவதாகச் சொல்லுகிறார்கள். ஆனாலும் நடைமுறையின்படி பார்த்தால் யாரும் எதையும் இழந்ததாகச் சொல்ல முடியாது— நிலப்பிரபு நிலத்தை இழந்திருக்கிறார் - அதற்குக் கைம்மாறாகப் பணம் பெற்றிருக்கிறார்.

--அடிகளார்

நாட்டின் சுதந்திரம் காக்கும் போரில் நமது கடமையைத் தொடர்ந்து செய்யவேண்டும்

திருச்சியில் தவத்திரு அடிகளார்

திருச்சி அருள்நெறித் திருக்கூட்டத்தின் சார்பில், 21-1-63ல் தேவர் மன்றத்தில் திரு. என். சுப்பிரமணியன் செட்டியார் M. L. A தலைமையில் நடைபெற்ற சீன ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டத்தில் தவத்திரு அடிகளார் அவர்கள் ஆற்றிய கருத்துரை]

முன்னர் நம் நாடு மன்னர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது; நாடாளும் மன்னன் வேற்று நாட்டு மன்னனுக்கு ஒரு கையெழுத்திட்டால் போதும்; நாடும் அடிமையாகி விடும்; அந்த நாட்டு மக்களும் அடிமையாகி விடுவர். இன்றைய நிலை அப்படியல்ல.

இன்றைய பாரதத்தில் மக்களாட்சி நடைபெறுகிறது. ஆதிக்க வெறிபிடித்த சீனா நம்மீது தொடுத்துள்ள இந்த யுத்தம் முதலாவது மக்கள் யுத்தம்.

சிற்சில சமயங்களில் சீனாவின் ஆட்சியாளர்கள் மிகவும் பைத்தியக்காரத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. ஒரு சமயம், பட்டுத் துணியைக் கிழிக்கும் போது உண்டாகிற ஒலியைக் கேட்பதில் சீன அழகி ஒருத்திக்கு ஆசைபிறந்ததாம். அதற்காக நாட்டிலே இருந்த பட்டுத் துணிகள் முழுவதையும் கொண்டுவரச் செய்து சீனப் பேரரசையே ஒரு மன்னன் சீரழித்தானாம். அதுபோலவே இன்றையச் சீனத்தலைமையை ஏற்றிருக்கும் ஆதிக்க வெறியன் சூ என் லாய் நமது பாரதத்திற்கு வந்தபோது, நமது தெருக்களில்—தெருக் கோடிகளில் பல்வேறு கட்சிகளின் கொடிகளும் பறப்பதைக் கண்டான். பாரத மக்கள் அரசியல் கருத்து வேறுபாடு காரணமாக நெல்லிக்காய் மூட்டை போல இருப்பதாக எண்ணிக்கொண்டான். கம்யூனிஸ்ட் தோழர்களும் சீனாவின் ஆதிக்கப் போருக்கு ஆதரவு தருவார்கள் என்று தவறாகக் கணக்குப் போட்டுக் கொண்டான்.

நமது பாரதத்தின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி சூ...என்...லாய் மனத்திலே பொறாமையை உண்டாக்கியது. ஆசியாவுக்கே சீனா தலைமை வகிக்கவேண்டும் என்றபேராசை அவனுடைய பிடரியைப் பிடித்துத் தள்ளியது. பாரதத்தின் மீது போர் தொடுத்தான். ஆனால், நிலைமை நேர்மாறாக ஆகிவிட்டது.

எப்போதுமே, உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் அனைவரும் ஒரே கருத்தைத் தான் ஒலிபரப்புவார்கள். அவ்வளவு ஒற்றுமை அவர்களிடம் இருக்கும். ஆனால் இந்தியா சீனா யுத்தத்தில் மாறுபட்ட இருவேறு குரல்கள் எழுந்து விட்டன. சீனாவின் போக்குத் தவறானது என்று மிகப் பெரும்பாலான கம்யூனிஸ்டுகளும், அதன் போக்குச் சரியானதே என்று மிகச் சில கம்யூனிஸ்டுகளும் கூறுகிறார்கள். பெர்லினில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சிகளின் மாநாட்டிலே பாரதத்தைக் கண்டித்துச் சீனச்சார்பாளர் பேசும் போது குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்றால், நமது பாரதத்தின் அறநெறி கொடி கட்டிப் பறப்பதாகத்தானே பொருள்?

பாரதம் தார்மீகத்தில் உயர்ந்த நாடு. அதனால்தான் உலக சமுதாயத்திற்கு நேர இருக்கும் ஆபத்தைத் தடுத்து நிறுத்துகிற வாய்ப்பும், உரிமையும்இன்று பாரதத்திற்குக் கிடைத்திருக்கிறது.

இன்றைய பாரத மக்கள் அரசியல் கட்சி இன வேறுபாடுகளையெல்லாம் மறந்துவிட்டு ஓரணியில் நிற்கின்றனர். இந்த எழுச்சியைக் கண்ட சீனன் திடுக்கிட்டான்–வந்தவழியே திரும்பினான் அவன் சொல்லிக் கொள்ளாமலேயே வந்தான் — வந்தவாறே திரும்பினான். உலக மக்களின் ஆதரவு நம் பக்கம் இருப்பது அவனுக்குச் சரியான பாடம் கற்பித்திருக்கிறது என்றே கருதலாம்.

இன்று இங்கு ஒப்பற்ற ஒற்றுமை நிலவுகிறது என்பது உண்மைதான். எனினும் மக்களின் செல்வாக்கை—நம்பிக்கையை இழந்த சிலர் அரசாங்கத்திற்குத் தொல்லை

கொடுக்கும் முயற்சியில் துணிந்து ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் மனிதகுல மாணிக்கமாகத் திகழும் பிரதமர் நேருவின் அணிக்குள் புகுந்து பிற்போக்குச் சக்திகளின் சார்பில் குழப்பம் விளைவிக்கப் பார்க்கிறார்கள். ஜஸ்டிஸ் வயலில் விளைந்த அறிஞர் அண்ணாதுரை அவர்களே இந்த நாட்டின் தேசிய எழுச்சியில் பங்கு பெற்றுப் பணியாற்றுகிற இந்த நேரத்தில், காங்கிரஸ் வயலில் தோன்றிய இவர்கள் தரும் தொல்லை பொறுக்க முடியாத அளவிற்கு அதிகரித்திருக்கிறது. இத்தகையவர்கள் விஷயத்தில் மக்கள் மிகவும் விழிப்போடு இருக்கவேண்டும்.

நமக்கு ஒரே தலைவர் நேரு- அவர் ஒப்பற்ற தலைவர் அவர் கடைப்பிடித்து வரும் நடுநிலைக் கொள்கையால் தான் இன்று நாம் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கிறோம்.

வீடுகளை நேருவின் படத்தால் அணிசெய்ய வேண்டும் ஏன்? ஒவ்வொருவரும் அவரவர் சட்டையிலேயே நேருவின் படத்தைக் குத்திக் கொண்டு, ''நான் நேருவின் அணியைச் சார்ந்தவன்'' என்று பெருமையோடு கூறிக் கொள்ள வேண்டும்.

நாட்டைப் போற்றி செய்தலும் மதவாதிகளுக்குரிய வழிபாடுகளில் ஒன்றுதான். நாட்டின் மானத்தைக் காக்க—நாட்டின் சுதந்திரத்தைக் காக்க நடைபெறுகிற இந்தப் போரில் எல்லாரும் அவரவர் கடமையை ஒழுங்காகவும் ஊக்கத்துடனும் தொடர்ந்து செய்துவர வேண்டும்.

★

அப்பர் அளிக்கும் விருந்து

நரகம் யாருக்கு?

'செல்வத்துப் பயனே ஈதல்' என்பது தமிழ்மறை; இரப்பார்க்குக் கொடுக்கவே இறைவன் செல்வத்தைத் தந்தான்; கொடுத்து வாழ்கிறவர்களுக்கே இறைவனின் தண்ணளி இன்பம் கிடைக்கும். 'கொடுத்து வாழாத செல்வர்களுக்குக் கொடிய நரகமே பரிசு' என்றார் அப்பரடிகள். இத்தகு உயர்ந்த சமுதாய நலன் பேணும் சமயத்தலைவரான அப்பரடிகளின் அழகிய பாடல் இதோ:

"இரப்பவர்க்கு ஈய வைத்தார்
ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கு எல்லாம்
கடுநரகங்கள் வைத்தார்;
பரப்புநீர்க் கங்கை தன்னைப்
படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக்கு அருளும் வைத்தார்
ஐயன்ஐயாறனாரே!"



—— அடிகளார் ——

கேள்வி:

தங்கக் கட்டுப்பாடு உத்தரவு குடியானவர்களையும், தங்கவேலை செய்கிறவர்களையும் பாதிக்கும் என்று ராஜாஜி கூறுகிறாரே அதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்:

முற்றிலும் பிரச்சாரத் தந்திரம். இன்னும் நம்முடைய நாட்டுக் குடியானவர்கள் தங்கத்தில் ஊன்றும்நிலை உருவாகவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் 14 காரட்டே போதுமானது. தங்கத்தால் அணிகலன்கள் செய்வது தடை செய்யப்பெறாமல் தரம்ஒன்றே தடைசெய்யப்பட்டிருப்பதால்தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படவும் வழியில்லை. அப்படியே ஏற்பட்டாலும், அரசாங்கம் அல்லது ஆங்காங்குள்ள சமூக நிறுவனங்கள் அவர்களுக்கு மாற்றுவழி காட்டி உய்விக்கும் முயற்சியில் ஈடுபடும்.

கேள்வி:

சமரசத் திட்டத்தைக் கம்யூஸ்டுகள் கூட ஆதரிக்கிறார்கள். ராஜாஜி 'சமரசத் திட்டத்தை இந்தியா ஏற்கக்கூடாது' என்று கூறுகிறாரே அதன் பொருளென்ன?

பதில்:

நேரு அத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்திருந்தால், 'ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்' என்று ராஜாஜி சொல்லியிருப்பார். அவருடைய ஒரே இலட்சியம் நேருவுக்குப் போட்டியாக இருக்கவேண்டும் என்பதுதான். கொள்கை வழிப்பட்டு வரும் சிந்தனைகளுக்கும் கருத்துக்களுக்கும் மரியாதை உண்டு - தரம் உண்டு. ராஜாஜி போன்றவர்களின் கருத்துக்களும் சிந்தனைகளும் ஆள்வழிப்பட்ட அழுக்காற்றின் வழியில் உருவாகின்றவை. எனவே அவை பொருளற்றவை.

கேள்வி:

'பிரிவினைத் தடைச்சட்டத்திற்குப் பயப்பட மாட்டேன்; கோழைகள்தாம் நடுங்கிச் சாவார்கள்' என்று பெரியார் ஈ. வெ. ரா. கூறியதாக ஒரு செய்தி வந்திருக்கிறதே அதைப்பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

பதில்:

சட்டங்களையும் பழக்கவழக்கங்களையும் எதிர்த்துப் பழகிய உரம் உடையவர் இங்ஙனம் சொல்லுவதில் என்ன வியப்பு இருக்கிறது?


கேள்வி:

தி. மு. க. வைக்காட்டி டில்லி சர்க்காரிடமிருந்து சில சலுகைகளைத் தமிழ்நாடு பெற்றுவருகிறது. தி. மு. க. அழிந்து விட்டால் தமிழ் நாட்டுக்குக் கிடைக்கும் சில சலுகைகள் இல்லாமல் போய்விடும். ஆதலால் நீங்கள் சிரஞ்சீவியாக வாழவேண்டும்' என்று தாங்கள் சட்டசபை தி. மு. க. அங்கத்தினர் திரு. ஆ. துரையரசனிடம் கூறியதாக 'மாலை முரசு' பத்திரிகையில் வந்ததே அது உண்மையா?

பதில்:

முற்றிலும் சரியானதல்ல - மொழிவழி தேசிய இனத்தின் குரல் நம்முடைய நலன்களைப் பாதுகாப்பதற்கு ஓரளவு துணை செய்யக்கூடும் என்பதே நமது கருத்து.

Registered No. M. 7058 THAMILAGAM - Weekly 28-1-63



கீரமங்கலம் தமிழ்ப்பேராயம்

கீரமங்கலம் தமிழ்ப்பேராயத்தின் சார்பில் 15-1-63ல் தமிழர் திருநாள் திரு. ஒப்பிலாமணி தலைமையில் கொண்டாடப் பெற்றது. திரு. சாமிநாதன், திரு. அரசகண்ணன், திரு. மணிமொழியார் ஆகியோர் பேசினார்கள்.

தவத்திரு அடிகளார் அவர்கள் பேசுகையில், பன்மொழிப் பயிற்சியின் இன்றியமையாமையை வலியுறுத்தி. இந்திக்குப் பரீட்சை இல்லை என்ற அமைச்சர் பக்தவத்சலனாரின் அறிவிப்பு வாணவேடிக்கை போன்றுள்ளது; தொடக்கத்தில் பலவண்ணங்கள் தோன்றி அழகு செய்தாலும் இறுதியில் கரியும் சாம்பலுமாக ஆகிவிடுவதுபோல அமைச்சரின் அறிவிப்பைக் கண்டு இன்று மகிழும் தமிழ்ச் சமுதாயம் எதிர்காலத்தில் வீழ்ச்சியுற நேரும் என்றும் குறிப்பிட்டார்கள்.

கானாடுகாத்தான் தேசீயப்பாதுகாப்புக்குழு

கானாடுகாத்தான் டவுன் பஞ்சாயத்துத் தேசியப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் கிராமத் தொண்டர் படை அமைப்புப் பிரச்சாரப் பொதுக் கூட்டம் 18-1-63ல் திரு. கே. எம். சிடி. முருகப்ப செட்டியார் தலைமையில் நடைபெற்றது. திரு. வி. ஆர். சிடி. சிதம்பரம் செட்டியார் தேசியக் கொடியை ஏற்றினார். தேவகோட்டை கோட்டாட்சித் தலைவர் திரு. டி. பி. கருணாகரன் நாயர் விழாவைத் துவக்கி வைத்தார். திருமதி புஷ்பராஜாமணி தொண்டர் படைப் பட்டியல் தயாரிப்பைத் துவக்கிவைத்தார். திருவாளர்கள் பி. சுப்பையா அம்பலம், எம். எஸ். கோபாலகிருஷ்ணன், எஸ். சோலைமலை, ஆராவமுதன், ஆர். சோமசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தவத்திரு அடிகளார் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

வெளியிடுவோர், ஆசிரியர்: ஆறு. சுப்பிரமணியன், அடிகளார் அச்சகம், குன்றக்குடி. இராமநாதபுரம்மாவட்டம். துணை ஆசிரியர்: சாமி பழனியப்பன்.